# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 217/மா/2017

ஆணை எண். 302/2017

நாள் : 26/12/2017

திரு R. குணசேகரன்,
சூரமங்கலம்,
சேலம் – 636 005. – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
சேலம் மாநகராட்சி,
சேலம். – எதிர் மனுதாரர்

சேலம், சூரமங்கலம், 14/6, காவேரி நகர் முகவரியில் வசிக்கும் திரு R. குணசேகரன் அவர்களின் 08.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 09.11.2017 அன்று பெறப்பட்டு, 217/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக சூரமங்கலம் வார்டு உதவி ஆணையர் அவர்களின் அறிக்கை பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம், சூரமங்கலம், 14/6, காவேரி நகர் முகவரியில் வசிக்கும் திரு R. குணசேகரன் என்பவர் தான் சேலம் மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றி 30.09.2012–இல் வயது மூப்பின் காரணமாக பணி ஓய்வு பெற்றதாகவும் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட பதவியில் 28.10.1994 அன்று தன்க்குச் சிறப்பு நிலை ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ள நிலையில், அப்பதவியில் மேலும் பத்து ஆண்டுகள் பணிபுரிந்துள்ள நிலையில் ஒரு போனஸ் ஊதிய உயர்வு வழங்க ஆணையிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. 28.10.1998 நாளிட்ட நிதித்துறை அரசு ஆணை எண். 562–இல் தனியர் ஒருவர் ஒரே பதவியில் 30 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒரு போனஸ் ஊதிய உயர்வு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. எனினும் இந்நேர்வு சம்பந்தப்பட்ட முறையீட்டு மனுதாரர் முதலில் பணிபுரிந்த சுகாதார உதவியாளர் பணியிடம், 01.06.1988 முதல் துப்புரவு ஆய்வாளர் பதவியுடன் இணைக்கப்பட்டுள்ள நிலையில் 01.06.1988 முதல் 30 ஆண்டுகள் பணிபுரிந்தால் மட்டுமே ஒரு போனஸ் ஊதிய உயர்வு வழங்க இயலும் என்று கருதிய நிலையில், 20.07.2017 நாளிட்ட சேலம் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துணை இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.கே2/3679/2012–இல், இது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அவர்களிடம் தெளிவுரை கோரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. சேலம் மாநகராட்சி, கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றிய திரு எம். கந்தசாமி என்பவர் 16.01.2007 அன்று மேற்படி பதவியில் 30 ஆண்டுகள் பணி நிறைவு செய்த நிலையில் அவருக்கு 17.01.2007 அன்று முதல் சூப்பர் கிரேடு நிலை வழங்கி 11.12.2015 நாளிட்ட செயல்முறை எண்.3026/M14/2015–இல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அலுவலர் 17.01.1977 அன்றுதான் பணியில் சேர்ந்துள்ளார். ஆனால் இந்நேர்வு சம்பந்தப்பட்ட முறையீட்டு மனுதாரர் 28.10.1974–லிலேயே சுகாதார உதவியாளர் பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஆனால், மனுதாரருக்கு போனஸ் ஊதிய உயர்வு வழங்க மறுத்துள்ள நிலையில் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார். திரு எம்.கந்தசாமி என்பவர் முதலில் பணிநியமனம் செய்யப்பட்டது சுகாதார உதவியாளர் பணியிடமா அல்லது சுகாதார ஆய்வாளர் பணியிடமா எனத் தெரியவில்லை. சுகாதார உதவியாளர் பணியிடத்தில் முதலில் திரு எம். கந்தசாமி நியமனம் செய்யப்பட்டிருந்தால், அவருக்கு வழங்கப்பட்டது போல் மனுதாரருக்கும் போனஸ் ஊதிய உயர்வு வழங்குவதே முறையாகும். எனினும், இந்நேர்வில் மேலும் காலம் தாழ்த்தாமல் சென்னை, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் கருத்தினைப் பெற்று மனுதாரருக்கு துப்புரவு ஆய்வாளர் பணியிடத்தில் போனஸ் ஊதிய உயர்வு வழங்குவது குறித்து விதிகளின்படி தாமதமின்றி பரிசீலிக்குமாறு சூரமங்கல வார்டு உதவி ஆணையர் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

மு. பழனிவேல்
செயலாளர், க்காக
27/12/17

பெறுநர்

1. உதவி ஆணையர்,
சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
சேலம் மாநகராட்சி,
சேலம்.

2. துணை இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை,
சேலம் மாநகராட்சி,
சேலம் – 636 007.

3. திரு R. குணசேகரன்,
14/6 காவேரி நகர்,
சூரமங்கலம்,
சேலம் – 636 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்